ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2488/05 - 2026 මැයි මස 11 වැනි සඳුදා - 2026.05.11

*2488/05 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டுவிலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. இராமசுந்தரம் இராமகிருஷ்ணன் என்பவர் அங்கம் வகிக்கின்ற சர்வஜன அதிகாரம் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. சூசை லாசரஸ் அந்தோனி என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கெங்காதரன் முகுந்தன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(ஆ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திரு. சூசை லாசரஸ் அந்தோனி என்பவர் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கெங்காதரன் முகுந்தன்**
தெரிவத்தாட்சி அலுவலர்
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
வவுனியா
2026,மே 11.

EOG 05 - 0112

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டு விலகல் காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1)ஆம் பிரிவின் கீழ், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. ரணவக ஆரச்சிகே தொன் ஜனக என்பவர் அங்கம் வகிக்கின்ற பொதுசன ஐக்கிய முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. ஹேமந்த பிரிய தர்ஷன நிஷ்ஷங்க என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பியுமி ஆடிகல ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ (1)(ஆ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திரு. ஹேமந்த பிரிய தர்ஷன நிஷ்ஷங்க என்பவர் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**பியுமி ஆடிகல**
தெரிவத்தாட்சி அலுவலர்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை

**கொழும்பு நகர தேர்தல் அலுவலகம்,**
**2026,மே 11.**

EOG 05 - 0113